**STC.NO. 20/2021 DW-1**

நாள் : 11.07.2025

பெயர் : முகமது அஸ்லாம்

த/பெ : முகமது தாகீர் பாஷா

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 ம் எதிரியின் நிறுவனத்தில் நான் இயக்குநராக இருந்தேன். என்னுடன் சேர்ந்து 2, 4 மற்றும் 5 ம் எதிரிகள் ஆகியோரும் அந்நிறுவனத்தின் இயக்குநர்கள் தான் என்றால் ஆமாம். நாங்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதால் மேற்சொன்ன அனைவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தனிப்பட்ட விதமாக அவர்கள் நான் சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் அளித்துள்ளார்களா என்றால் ஆமாம். அந்த கடிதத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் என்னுடைய வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். எனது முதல் விசாரணையில் பெயருக்காக இயக்குநர்களாக உள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளேன் அதனை எதை வைத்து சொல்கிறேன் என்றால் நாங்கள் பெயருக்காகவே இயக்குநர்கள். அலுவலக பணிகள் அனைத்தையும் முகமது சாலீம் தான் செய்து வந்தார்.

தினசரி வேலைகள் என்றால் எதனை குறிப்பிடுகிறீர்கள் என்றால் பைனான்ஸ், அலுவலக வேலைகள் மற்றும் அனைத்து வேலைகளும் 2 ம் எதிரி தான் பார்த்து வந்தார்.எனது நிறுவனம் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் என்றால் சரிதான். மேற்கூறிய அனைத்து பணிகளும் எனது நிறுவனத்தில் 2 ம் எதிரி தான் பார்க்க வேண்டும் என்று Resolution செய்யப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனக்கு வங்கி பரிவர்தனை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் தற்போது என்ன பணி செய்து வருகிறேன் என்றால் கன்செல்டிங் வேலை செய்து வருகிறேன். நான் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் என் மனைவி பெயரில் நான் தான் நிறுவனத்தை நடத்தி வருகிறேன என்றாலும் சரியல்ல எனது மகன் தான் நடத்தி வருகிறார்.

நான் டெக்னிக்கல் கன்சல்டன்டாக உள்ளதற்கு கட்டணம் பெறுகிறேனா என்றால் ஆமாம். அந்த கட்டணங்களை காசோலையாக பெறுகிறேனா என்றால் ஆன்லைன் பரிவர்தனை மூலமாக பெறுகிறேன். அந்த பணத்தை எவ்வாறு பயன்படுத்துகிறேன் என்றால் கிரிடிட் கார்ட் பயன்படுத்தி செலவு செய்து அந்த கிரிடிட் கார்ட் கட்டணத்திற்கு அந்த பணத்தை பயன்படுத்தி வருகிறேன். எனக்கு ஓரளவுக்கு வங்கி பரிவர்தனை தெரியும் என்றால் ஆன்லைன் பரிவர்தனை தெரியும் மற்றபடி தெரியாது. நானும் 3, 4, 5 ஆகிய மற்ற இயக்குநர்களும் 2 ம் எதிரிக்கு எங்கள் நிறுவனத்தின் வங்கி பரிவர்தனை செய்ய முழு அதிகாரம் அளித்ததன் பேரில் தான் 2 ம் எதிரி வங்கி பரிவர்தனை செய்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் அவர் தினசரி என்ன என்ன வங்கி பரிவர்தனைகள் செய்து வருகிறார் என்று எங்களுக்கு தெரியாது. 2 ம் எதிரிக்கு நாங்கள் எங்கள் நிறுவன பணிகளுக்கு முழு அதிகாரம் அளித்துள்ளதால் அவரின் செயல்கள் அனைத்தும் மற்ற இயக்குநர்களான எங்களையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு இவ்வழக்கின் புகார்தாரர் சென்னை NCLT ( National Company Law Turibunal) முன்பு Corporate insolvency மனு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த வழக்கில் ஒரு எதிர் மனுதாரர் என்றாலும் NCLT முன்பு ஆஜராகி உள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் என் சகோதரர் சலீம் - யை Driving செய்து அழைத்து சென்றேன். 1 ம் எதிரி நிறுவனத்தில் நான் முழு நேர இயக்குநர் என்பதால் தான் நான் NCLT முன்பு ஆஜர் ஆனேன் என்றால் சரியல்ல.

NCLT முன்பு மனு நிலுவையில் இருந்த போது தான் எங்கள் நிறுவனத்திற்கும் புகார்தாரர் நிறுவனத்திற்கும் சமரசம் ஏற்பட்டு ரூ.4,00,000/- DD ஆகவும் மீத தொகைக்கு இந்த வழக்குகளின் காசோலைகள் 6 ம் எதிரியால் வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

**(புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.07.13 11:23:29 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.